
# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 10 | அக்டோபர்- 1997 | இதழ் - 10



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்

1. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் 1
2. நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் 7
3. பெண்கள் பகுதி 11
4. முன் குறிக்கப்பட்டவர்கள் 14
5. கிறிஸ்துவை அறிக்கையிடுதல் 16
6. நேர்முறையான ஆவிக்குரிய சிந்தை 21
7. I கொரிந்தியர் 16 : 13 25
8. ஆவியின் கனி I (அன்பு) 29
9. ஆண்டவரும், அப்போஸ்தலரும், பிரசங்கிகளுக்கு வைத்திருந்த முன் மாதிரி 31

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 10** **OCTOBER - 1997** **Issue -10**


## ஆசிரியவுரை

# தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்

மத்தேயு எழுதின சுவிசேஷம் பத்தொன்பதாம் அதிகாரம் ஆறாம் வசனம், வேதாகமத்திலுள்ள மிகப் பிரபலமான வசனங்களில் ஒன்று. பிதாவாகிய தேவனால் ஏற்படுத்தப்பட்ட திருமணத்தின் மேன்மையை நிலைநாட்டும்படியாக நமதாண்டவர் சொன்ன வார்த்தை இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ திருமணங்கள் வருடந்தோறும் நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அத்திருமண வைபவங்களில் பங்கு பெறுகின்றனர். எல்லா திருமணங்களிலும் தவறாமல் பயன்படுத்தப்படும் வசனம் தான். **"ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்ககடவன்'**, என்பது. ஆம் சிருஷ்டி கர்த்தாவால் ஒழுங்கு செய்யப்பட்ட மகிழ்ச்சி பொங்கும் இந்த உறவு ஓர் நிலைத்த உறவாக மனிதனால், அவனுடைய சின்ன புத்தியால் பிரிக்கப்படாத ஓர் உறவாக இருக்க வேண்டுமென்ற தன் விருப்பத்தைத்தான் இந்த வசனத்தின் மூலம் கிறிஸ்துவானவர் வெளிப்படுத்தியுள்ளார்.

I கொரி 9 : 9–ல் "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக" என்று எழுதியிருப்பதை நாம் காணலாம். அது மாத்திரமல்ல அதே வசனத்தின் பிற்பகுதியில் **தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ** என்ற ஒரு கேள்வியையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

தேவன் மாடுகளுக்காகக் கவலைப்படாமல் இல்லை. கவலைப்பட்டே இவ்வசனத்தைச் சொல்லியுள்ளார். ஆனால் இவ்வசனத்திலுள்ள கேள்விக்குறியின் நோக்கம் மறைந்திருக்கும் சில பேருண்மைகளை நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான்.

வேலையாள் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்பது இப்பகுதியில் மறைந்துள்ள ஓர் உண்மை. மாத்திரம் அல்ல, சுவிசேஷ வேலையைச் செய்கிறவர்கள் இதன் மூலம் பிழைப்பூட்டப்பட வேண்டு மென்பதும், இக்கேள்விக்குறியின் பிரதான நோக்கங்களில் ஒன்று.

I கொரி 9 : 9 எவ்வாறு நேரிடையான பொருள்களுக்கும் மேலான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள உதவுகிறதோ அதைப் போலவே மத் 19 : 6ல் இருந்தும் நாம் நம்முடைய மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான சில ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்கக் கூடாதென்பது அவருடைய விருப்பம். திருமணத்தின் மூலம் ஆணையும், பெண்ணையும் இணைத்த தேவன் வேறு சிலவற்றையும் இணைத்து வைத்துள்ளார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவைகளைப் பிரிக்கக் கூடிய அதிகாரம் எந்த மனிதனுக்கும் கிடையாது. அப்படிப் பிரிப்பது தேவனுடைய ஆலோசனையை, கட்டளையை மீறுவதாகும்.

இப்பொழுது தேவன் இணைத்துள்ள சிலவற்றைக் காண்போம்.

## 1. கிறிஸ்துவும், சபையும்.

இன்றைக்குப் பெரும்பாலான பிரிவினை சபைக் கூட்டத்தார்களும், கிறிஸ்துவ மதத் தலைவர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துப் பல பட்டங்களால் தங்களை அலங்கரித்துக் கொள்கிறவர்களும், போதிக்கும் ஒரு விநோத கொள்கை இரட்சிப்புக்கும், சபைக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்பது, அப்போஸ்தலர் 20 : 28ம் வசனம் இயேசு தமது சுய இரத்தத்தைச் சிந்தி சபையைச் சம்பாதித்தார் என்று சொல்கிறது. அதாவது அவர் தன் இன்னுயிரைக் கொடுத்ததே சபைக்காகத்தான்.

“. . . . . . .இரட்சிக்கப்படுபவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்” (அப். 2 :47) என்றும் காண்கிறோம்.

வசனங்கள் இவ்வாறாகச் சொல்லும் போது கிறிஸ்துதான் முக்கியம், சபை முக்கியமல்ல என்பது பேதமையைத்தானே காட்டுகிறது.

எபேசியருக்கு எழுதின நிருபம் 5-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள உறவை அடிப்படையாக வைத்து கணவன் மனைவி உறவு விவரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் கணவன், மனைவி இடையே இருக்கும் நெருக்கம் தான் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள நெருக்கமாகும். மேற்கண்ட அதிகாரத்தின் கடைசிப்பகுதி மீட்பின் திட்டத்தில் கிறிஸ்துவும், சபையும் பின்னி பிணைந்து இருக்கிறார்கள் என்பதை எளிய நடையில் எடுத்துரைக்கிறது. இதைப் புரிந்து கொள்வதில் யாருக்கும் சிரமம் இருக்காது என நம்புகிறேன்.

கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள உறவை விளங்கிக் கொள்வதில் இன்னும் சிரமம் இருந்தால் இந்த வசனங்களைக் கூர்ந்து கவனியுங்கள். அப். 8 : 1ல் அந்நாட்களில் சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று என்று காண்கிறோம். சபையைத் துன்பப்படுத்தின கலகக் கும்பலுக்கு சவுல் தலைமை ஏற்கிறார். அப்படி சபையை துன்பப்படுத்தின சவுலை இயேசு தமஸ்கு செல்லும் நெடுஞ்சாலையில் சந்தித்துச் சொல்வதைக் கேளுங்கள். **"சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்"**. (அப் 9 : 4) என்றார். ". . . நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே . ." (அப். 9 : 5) சவுல் இயேசுக் கிறிஸ்துவை ஒன்றுமே செய்யவில்லை. கிறிஸ்துவை அவர் ஒரு போதும் துன்பப்படுத்தவில்லை. **அவன் துன்பப்படுத்தினதோ சபையைத்தான்.** ஆனாலும் கிறிஸ்து சவுலைப் பார்த்துக் கேட்பது என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய், **நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்பது தான்.** கிறிஸ்துவும் சபையும் ஒன்று என்பது தான் இதன் பொருள். கிறிஸ்துவும் சபையும் பிரிக்க முடியாதவர்கள் என்பதை இதைவிடத் தெளிவாக எப்படிக் கூற முடியும்.

ஆனால் இன்றைக்கு வரம் பெற்றவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்கிறவர்கள் கூட சபை முக்கியமல்ல, கிறிஸ்துதான் முக்கியம் என்கின்றனர். கிறிஸ்து தேவை என்கிறவர்கள் அவர் தம்முடைய இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த சபையைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும். இல்லையேல் பயனில்லை. ஆகையால் **"தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்"**.

**2. விசுவாசமும், ஞானஸ்நானமும் :**

தேவனுடைய திட்டத்தை மீறுவதையே தங்கள் தொழிலாக கொண்டிருக்கும் அநேக பிரசங்கிமார்கள் விசுவாசத்தையும் ஞானஸ்நானத்தையும் கூட பிரித்து விடுகிறார்கள். **"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்"** என வேதம் சொல்கிறது. (மாற்கு 16 : 16) நேர்மையோடும் மனத்தாழ்மையோடும்

வேதத்தை வாசிக்கும் எந்த ஒரு மனிதனும் இந்தக் கட்டளையைப் புரிந்து ஏற்றுக் கொள்வதில் சிரமம் இருக்காது. ஆனால் இதைக் கூடத் தவறாகப் போதித்து மக்களை குழப்பி விடுகின்றனர் பலர். **விசுவாசித்த உடனேயே** இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது இன்று அநேகருடைய போதனை. ஞானஸ்நானம் இல்லாமலே இரட்சிப்பு சாத்தியமெனில் ஞானஸ்நானம் அவசியமில்லாத ஒன்றுதானே. ஞானஸ்நானம் என்ன ஓர் அர்த்தமில்லாத சடங்கா? அல்லது அவசியமில்லாத ஒன்றைத்தான் மாற்கு 16 : 16 நமக்குப் போதிக்கிறதா? பரிசுத்த ஆவியானவர் தெளிவில்லாத உபதேசத்தைதான் நமக்கு அருளியிருக்கிறாரா? இல்லை, இல்லவே இல்லை. நம்முடைய கர்த்தர் இரட்சிப்புக்கு முன்னதாகவே விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் இணைத்து வைத்துள்ளார். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் தான் இரட்சிக்கப்படுவான், சந்தேகமோ, குழப்பமோ வேண்டாம்.

மாற்கு 16 : 16ன் படி குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஞானஸ்நானம் எவ்வளவு புத்தியீனம் என்பதை நாம் அறியமுடியும். விசுவாசத்தை ஞானஸ்நானத்தோடு இணைத்திருக்கும் போது விசுவாசிக்க முடியாத குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி சரியாகும்? உலகக் கல்வியில் தேர்ந்து அறிவு பெருத்தவர்கள் கூட இந்த தவறை எங்ஙனம் செய்ய முடிகிறது? குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சரி என்று வேதாகமம் எங்கும் தேடினும் சான்று கிட்டாது. தேவன் கொடுத்துள்ள அறிவை வைத்து கொண்டு தேவ கட்டளையை மீற வேண்டாம்.

தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அருளுகிறார் கிறிஸ்து (எபி 5:9) நாம் கர்த்தரை நேசிப்போமானால் அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். வசனத்திற்குக் கீழ்ப்படிகிறயாவருக்கும் நித்திய இரட்சிப்பு உண்டு. அந்த நித்திய இரட்சிப்புக்குப் பங்காளிகளாக மாறவேண்டுமெனில் தேவன் **இணைத்த விசுவாசத்தையும், ஞானஸ்நானத்தையும் மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்.**

### 3. ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்தல் :

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோவான் 4 : 24). இப்படித்தான் ஆராதிக்க வேண்டுமென்று வேதாகமம் வரையறுத்துச் சொல்லும் பொழுது, இன்று அநேகர் **"தேவனை எப்படி வேண்டுமானாலும் ஆராதிக்கலாம் என நினைக்கின்றனர்.** ஒருவேளை நினைத்தபடியெல்லாம் ஆராதிப்பதை

நினைவும், உணர்வுமற்ற விக்கிரகங்கள் வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒன்றான மெய்தேவனாகிய யெகோவா ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

ஆவியோடு துதித்தல் என்பது நியாயமான, நேர்மையான மனநிலையைக் குறிக்கிறது. நன்றியறிதலோடு கூடிய உணர்வுகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டும். பக்தி மாத்திரமல்ல, பயமும் அவருடைய சமூகத்தில் சேரும் பொழுது இருக்க வேண்டும். தேவ சமூகத்தில் சேரும் பொழுது ஒருவன் எப்படி இருக்க் வேண்டுமென்பதை சங்கீதக்காரன் விவரிக்கும் விதத்தைப் பாருங்கள். "தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத் தக்கவர். தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்" (சங் 89:7) நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால் படியிடக் கடவோம் வாருங்கள். (சங் 95 : 6).

இன்று தேவனை ஆராதிப்போரில் அநேகர் பயபக்தியோடும், ஆவியோடும் அவருடைய சமூகத்தில் வருவதில் பெரும்பாலும் தவறிழைப்பதில்லை. ஆனால் கூடி வருகிறவர்கள் **"உண்மையோடு ஆராதிக்கிறார்களா என்று கவனித்தால் வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியே இல்லை. ஆம் "ஆவியோடும், உண்மையோடும்"** என்பதை மனிதன் பிரித்துவிட்டான்.

உண்மையோடு ஆராதிப்பதென்பது சத்தியத்தோடு ஆராதிப்பதாகும். தேவனுடைய வார்த்தைகள்தான் சத்தியம் (யோவான் 17 :17) இன்றைக்கு ஆராதனைகள் வசனத்தை ஆதாரமாக வைத்து நடத்தப்படுகிறதா? பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை அடிப்படையாக வைத்து ஏறெடுக்கப் படுகிறதா? சிந்திக்க வேண்டிய கட்டத்தில் நாம் உள்ளோம்.

உதாரணமாக, இசைக்கருவிகளோடு தேவனை ஆராதிக்க வேண்டுமென்று புதிய ஏற்பாடு எங்காவது வலியுறுத்துகிறதா? இல்லைதானே. ஆனால் அதே புதிய ஏற்பாடு தேவனை துதிக்கும் பொழுது எப்படிப்பாட வேண்டுமென்று கொடுக்கும் வசன ஆதாரங்களைப் பாருங்கள் (கொலோ 3:16−17; I கொரி 14:15) கட்டளையிடப்படாத ஒன்றை நாமாகவே **சேர்த்து ஆவியிலிருந்து உண்மையைப்** பிரித்து விட்டோம்.

வாரத்தின் முதல் நாளிலே கூடிவரும் பொழுது கர்த்தருடைய பந்தியிலே கலந்து கொள்ள வேண்டுமென்று வேதாகமத்தில் நாம் காண்கிறோம். (அப். 20 :7) புரிந்து கொள்ளக் கூடி நடையில் தான்

சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இன்றைக்கு எத்தனை ஆராதனைகளில் வார்ரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தரின் பந்தி கடைப்பிடிக்கப்படுகிறது? மிகச் சொற்பமே. இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற கட்டளையை **கழிப்பதன் மூலம் நாம் ஆவியிலிருந்து உண்மையைப் பிரித்து** விட்டோம்.

ஒரு புறம் இசைக் கருவிகளை ஆராதனையில் **சேர்த்து** தேவனுடைய வார்த்தையை அவமாக்கினோம். இங்கே கர்த்தருடைய பந்தியை ஆராதனையில் இருந்து எடுத்து தேவனுடைய வார்த்தையை அவமாக்குகிறோம். ஆனால் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று தான் வசனம் நம்மை எச்சரிக்கிறது. (வெளி 22:18,19). எங்கெல்லாம் எச் சரிப்பு மீறப்படுகிறதோ அங்கு தண்டனை உறுதிதான். தேவனுடைய கரங் களிலிருந்து தண்டனையைப் பெற்றுக் கொள்ள விருப்பமா? (எபி 10:31).

தேவன், அவரை ஆராதிக்கும்போது ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமென்று, இரண்டையும் இணைத்து வைத்துள்ளார். **ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.**

தேவ ஆலோசனைகளை அப்படியே ஏற்று, பரலோக பாக்கியத்தை நாமனைவரும் பெற்றுக் கொள்ள தேவன் அருள்புரிவாராக.

**E.Z.S. ராஜநாயகம்**


## அருமையான வாய்ப்பு

*பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.*

*பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர் களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.*

*புத்தகம் முற்றிலும் இலவசம் ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. 15-*

முகவரி : தமிழ் உலக ஆத்து ஆதாயத் திட்டம்
தபால் பெட் எண் - 27, காங்கயம் - 638 701.

# நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர்

இக்குறிப்பிட்ட பாடத்தில் நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

தேவன் மனிதனை உண்டாக்கினார். அவனைத் தமது சொந்த சாயலாகவே உண்டாக்கினார் (ஆதி 1 : 26,27; ஆதி 2:7) அதாவது அவனுக்கு ஒரு ஆவியையும் என்றும் மரிக்காத ஒரு ஆத்துமாவையும் கொடுத்தார். (மத் 16 : 26) அவனை மிகவும் நேசித்தார். ஆகவே தான் அவன் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படும்படியாய், தம்முடைய சொந்தக் குமாரனை கொடுமையான சிலுவையில் மரிக்கக்கொடுக்க சித்தமுள்ளவராயிருந்தார். (யோவான் 15 : 13) யாரோ ஒருவருக்காக அவர் அதைச் செய்யாமல் ஒட்டுமொத்த மனுக்குலத்துக்காகச் செய்தார். அதன் பொருள் யாதெனில், ஒவ்வொரு மனிதனும் முக்கியமானவனே. இதன் பொருள், நீங்கள் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள்.

ஆனால், வேதாகமத்தில் தனித்து விளங்கும் மனிதர்களை கவனித்துப் பாருங்கள். அவர்கள் யாவரும் கர்த்தர் தங்களைப் பயன்படுத்த முழுமையாக அனுமதித்தபடியால், மகத்தான மனிதர்களாக மாறினார்கள். நோவா, ஆபிரகாம், மோசே, தானியேல், ஏசாயா, எலியா, எலிசா யோவாந்ஸ் நானகன், ஒவ்வொரு அப்போஸ்தலர்கள் என்று இன்னும் அநேகரைப் பாருங்கள்.

உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுலை எண்ணிப் பாருங்கள். அவன் தன் வாழ்நாட்காலத்தில், கர்த்தருக்காக என்ன செய்து முடிக்க முடிந்தது என்பதைக் கவனியுங்கள். அவன் ஒரு கட்டத்தில், கர்த்தருக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் விரோதியாக இருந்தவன். ஆனால் மனமாற்றப்பட்டவுடன், கர்த்தருக்காகவும், அவருடைய காரியங்களுக்காகவும் மிகவும் கடினமாகப் பாடுபட்டார். அவன் மேற்கொண்ட சுவிசேஷச் சுற்றுப் பயணங்களையும், அதன்மூலம் கிறிஸ்துவுக்காக அவனால் மனமாற்றப்பட்டவுடன், கர்த்தருக்காகவும், அவருடைய காரியங்களுக்காகவும் மிகவும் கடினமாகப் பாடுபட்டார். அவன் மேற்கொண்ட சுவிசேஷச் சுற்றுப்பயணங்களையும், அதன்மூலம் கிறிஸ்துவுக்காக அவனால் மனமாற்றப்பட்ட மக்களையும் நினைத்துப் பாருங்கள். பவுலின் கடுமையான பிரயாசத்தினால் மனமாற்றமடைந்த மக்களாலும், ஏனைய அப்போஸ்தலர்களின் பிரயாசங்களால் மனமாற்றப்பட்டவர்களாலும், முப்பதே ஆண்டுக்குள்ளாக, உலகமெங்கும் சுவிசேஷம் எடுத்துச் செல்லப்பட்டது. ஆர்வமும், அர்ப்பணிப்பும், ஒப்புக் கொடுத்தலும் இருக்கும்போது குறைவானவர்களாலோ அல்லது தனி ஒருவராலோ, நம்ப முடியாத அளவில் நன்மைகளைச் செய்ய முடியும்.

அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில் ஒரு மனிதனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் தரப்பட்டுள்ள முக்கியத்துவத்தைப் பாருங்கள். அது கொர்நேலியுவும், அவன் குடும்பத்தாரும் தான். அவன் ஒரு இராணுவ வீரன். ஆனால் நல்லவன்; அது மாத்திரமல்ல, அவன் பக்தியுள்ளவன். எப்பொழுதும் ஜெபம் செய்து ஏழைகளுக்கு தானதர்மம் செய்து வந்தபடியால், தேவன் அவனைக் கவனித்தார். தொடர்ந்து அங்கே பார்த்தால், பேதுரு அவனையும், அவன் வீட்டாரையும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் நோக்கத்தோடு சந்திக்கும்படியாக, தேவன் வழிவகுத்தார் என உள்ளது. அது நிறைவேறியவுடன், வசனம் இவ்விதமாகச் சொல்கிறது. "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு : நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள்" (அப். 10 : 44 -48).

கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் மனமாற்றப்பட்டதில், விசேஷமாக அடங்கியுள்ள ஒரு முக்கிய காரியமென்னவெனில், அவர்கள் புறஜாதியாராயிருந்தார்கள் என்பது. புற ஜாதியிலிருந்து மனமாற்றமடைந்தவர்களில் இவர்கள் தான் முதன் முதல். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் எத்தியோப்பியாவிலிருந்து மனமாற்றப்பட்ட ஒரு மனிதனை நாம் படிக்கலாம். ஆனால், அவன் எருசலேமுக்குத் தொழுதுகொள்ளச் சென்றபடியால், அவன் யூதமார்க்கத்தமைந்தவனாகத் தெரிகிறது. இங்கே, கொர்நேலெயுவும் மற்றும் அவன் வீட்டாரும் மனம் மாற்றப்பட்ட இச்சம்பவத்தில், கிறிஸ்துவின் காரியமாக, அந்நாட்களில் இது என்ன பொருளைக் கொடுத்தது என எண்ணிப் பாருங்கள். அவர்கள் புறஜாதியிலிருந்து முதலாவதாக மனம் மாறியவர்கள். அன்றைய நாளிலிருந்து, அவர்களின் பெயர், புற ஜாதிகள் மனமாற்றமடைந்து கிறிஸ்தவர்களாவதற்கு மாதிரியாக தொடர்ந்து பேசப்பட்டு வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அது மாத்திரமல்ல, அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்த புறஜாதிகளை எண்ணிப் பாருங்கள். இந்நாள்வரைக்கும், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புறஜாதிகளின் பின்னணியிலிருந்துதான் வந்திருக்கிறார்கள்.

இப்பொழுது நாம் திரும்பவும் எத்தியோப்பியாவிலிருந்து மனம் மாறிய மனிதனிடத்திற்குப் போவோம். பிலிப்பு, சமாரியாவில் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றிகரமாக வேலை செய்து வந்திருந்தாலும், வேதாகமம் இவ்விதமாகக் கூறுகிறது. "பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி : நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசாபட்டணத்துக்குப் போகிற வனாந்திர மார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு

மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்குத் திரும்பிப் போகும்போது தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்.

ஆவியானவர் : நீ போய்! அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு; நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால் : அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி : தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.

இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். (அப். 8 : 26-39).

இந்த மனமாற்ற சம்பவத்தைப் படிப்பதன் மூலம், நாம் பல மகத்தான பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். ஆனால், இங்கே நாம் வலியுறுத்துவது யாதெனில், எத்தியோப்பிய மந்திரி கர்த்தருக்குக் கீழ்ப்படிய வசதியாக, பிலிப்பு, அவனுக்கு சத்தியத்தைப் போதிக்கும் தருணத்தை ஏற்படுத்தும் படியாய், கர்த்தருடைய தூதன் பிலிப்பையும், எத்தியோப்பிய மந்திரியையும் ஒன்று சேர்த்தார். அந்தளவிற்கு மனிதன் முக்கியமானவனாய் இருந்தான். இப்போது, கேள்வி யாதெனில், யார் இந்த மனிதன்? அவன் ஒரு பக்தியுள்ளவன். யூத மார்க்கத்தின் படி, கர்த்தரைத் தொழுதுகொள்ள, வெகு தூரத்திலுள்ள

எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமுக்கு வந்தவன். அதன் பொருள் என்னவென்றால், அவன் தாழ்மையுள்ளவன், உண்மையுள்ளவன். ஒப்புக் கொடுத்தவன். அது மாத்திரமல்ல, ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்குப் பொக்கிஷதாரியாக இருந்தபடியால், அவன் ஒரு அதிகாரமுள்ள மனிதன். இப்பொழுது, சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தன்னுடைய தேசத்திற்குத் திரும்பி வந்தபோது, தன்னுடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள் மீதும், நாட்டின் மக்கள் மீதும், தேசத்துத் தலைவர்கள் மீதும் எந்தவகையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பான் என எண்ணுகிறீர்கள்? கர்த்தர் இந்த மனிதனிடத்தில், தன்னுடைய சுவிசேஷத்தைப் பரப்பும் பெரும் சக்தி இருப்பதைக் கண்டார் என்றுதான் நாம் முடிவு செய்ய வேண்டும். ஆனால், நான், இந்த எத்தியோப்பியன் கர்த்தரை ஏமாற்றிவிட்டதாகவே நான் எண்ணுகிறேன்.

இப்பொழுது, நீங்கள் யார்? ஒரு வேளை நீங்கள் ஒன்றுமில்லாதவர்கள் என்று நினைக்கலாம். நீங்கள் உங்களுக்கு பெரிதாக இல்லாமலிருக்கலாம். ஆனால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவீர்களானால், உங்களை அவருக்குக் கொடுப்பீர்களானால், அவர் உங்களை ஒரு பொருட்டாக மாற்ற முடியும். நீங்கள் இளைஞராகவோ, முதியவராகவோ, ஒரு பெண்ணாகவோ, ஒரு ஆணாகவோ, பணக்காரராகவோ, ஏழையாகவோ, படித்தவராகவோ, படிக்காதவராகவோ, அல்லது எப்படிப்பட்டவராக வேண்டுமானாலும் இருக்கலாம். நான் கர்த்தருக்கு ஒரு போதும் பிரயோஜனமாக இருக்க முடியாது என சாக்குச் சொல்கிறவராக இருக்கலாம். ஆனால், அப்படி நினைப்பது தவறு. வேதாகமத்தில் உள்ள ஆண்களையும் பெண்களையும் கவனித்து, தேவன் அவர்களை எப்படி எடுத்து மகத்தான ஊழியர்களாக உண்டாக்கினார் எனப் பாருங்கள். ஏன், உங்களிடமாய் அதே போல் செய்ய முடியாது? நான் என்ன சொல்கிறேனென்றால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சபையில் அங்கத்தினராக மாறினால், தொடர்ந்து நீங்கள் உங்களை அவருக்குக் கொடுத்தால், அதாவது நீங்கள் அவருக்காக வேலை செய்தால், நீங்கள் அவருடைய காரியமாக, நற்செய்தியைப் பரப்புவதற்கு அவர் உங்களை ஒரு பிரசங்கியாகவோ, போதிக்கும் ஆசிரியராகவோ அல்லது தூர இடங்களுக்கு நற்செய்தியை தூக்கிச் செல்லும் மிஷனரியாகவோ அல்லது அவருடைய காரியமாக வேறு பொறுப்புகளைச் செய்யக் கூடியவராகவோ மாற்றமுடியும்.

ஆகவே, இந்தப் பாடத்தில் நாம் வலியுறுத்துவதுபோல, கர்த்தருடைய சபை இல்லாத இடத்தில் நீங்கள் இருப்பீர்களானால், அங்கே, கர்த்தருடைய வேலையை ஆரம்பிக்கும் பணிக்கு, நீங்கள் முன்னின்று பணியாற்ற முடியும். ஆம் நீங்கள் அதைச் செய்ய முடியும். கர்த்தர் உங்களோடிருந்து, உங்கள் முயற்சிகளை ஆசீர்வதிப்பதாக வாக்குக் கொடுத்துள்ளார். இந்தக் காரியங்களை எண்ணிப் பார்த்து, கர்த்தரின் சித்தம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும்படியாய் ஜெபியுங்கள்.

**EZSR** **J.C. சோட்.**

பெண்கள் பகுதி

# "தேவனுடைய வழியே சிறந்தது"

ஆபிரகாம் ஒரு தேர்ந்த விசுவாசியாக இருந்தபடியால், தேவன் அவனைப் பார்த்துக் கூறும்பொழுது, உன் பிள்ளைகளையும், உன் வீட்டாரையும் உன் பின்னே வரக் கட்டளையிடு, அவர்கள் கர்த்தருடைய வழியைக் காத்துக் கொண்டு நீதியாக நடக்கட்டும் என்றார். ("நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்"). (ஆதி 12 : 2,3).

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு தேவனுக்கு உண்மையுள்ளவனாயிருந்தான். அவனுக்கு ஏசா, யாக்கோபு என இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். ஏசா, தேவனை விசுவாசியாத பெண்களை மணந்ததினால், அவனுடைய சந்ததியார் தேவ நம்பிக்கையற்றவர்களாயிருந்தார்கள். ஆதி 26 : 35ல் ஏசாவின் விக்கிரக ஆராதனை செய்யும் மனைவிகள், **"இவர்கள் ஈசாக்கிற்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்"** என்று காண்கிறோம். ஆதி 27 : 46ல் ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி, **"ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது. இந்த தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானா னால் என் உயிர் இருந்து ஆவதென்ன"** என்றாள்.

குடும்பமானது, தேவன்மீது விசுவாசத்தைத் தங்கள் இருதயங்களில் கொண்ட கணவன், மனைவி இவர்களால் கட்டப்பட வேண்டுமென்பதை ரெபெக்காள் உணர்ந்திருந்தாள். வேதாகம சரித்திரத்தில் இது ஒரு முக்கிய அம்சமாகவே விளங்கி வந்துள்ளது. இன்றைக்கும் கூட பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு மணம் முடிக்கும் பொழுது, தங்கள் பிள்ளைகள் விசுவாசமுள்ள துணையைத் தேர்ந்தெடுக்கும் படியாகப் போதிக்க வேண்டும்.

ரெபெக்காளின் வற்புறுத்தலின் காரணமாகவே யாக்கோபு, ஆரானிலிருக்கிற தன் மாமன் வீட்டிற்கு அனுப்பப்பட்டான். அங்கே அவன் மெய்யான தேவனை ஆராதிக்கும் தன் மாமன் மகளைச் சந்திக்கிறான். அவன் அவ்ளை தாமதமில்லாமல் நேசித்தான். அந்த அப்பழுக்கற்ற நேசம், அவளுக்காக ஏழு ஆண்டுகள் சேவகம் செய்ய ஒப்புக் கொள்ள வைத்தது **"... அவள்**

**பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்கு கொஞ்ச நாளாகத் தோன்றினது"** (ஆதி 29 : 20). அந்த வருஷங்கள் நிறைவேறின போது, லாபான் ராகேலுக்குப் பதிலாக தனது மூத்த மகளை திருமணத்தின் மூலமாக, தந்திரமான முறையில் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான்.

சிருஷ்டிப்பின் காலந் தொட்டே, திருமணத்திற்கான தேவனுடைய திட்டம், "ஒருவனுக்கு ஒருத்தி" என்பதே. ஆதாம், ஏவாள் இவர்களை ஒன்றாக இணைக்கும்பொழுது, தேவன் இவ்விதமாகவே சொன்னார். "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; **அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.** (ஆதி 2 : 24).

அந்நாட்களில், தேவ சித்தத்திற்கு விரோதமாக மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணந்து கொள்வது ஒரு பொதுவான பழக்கமாகிவிட்டது. இப்பழக்கத்தை தேவன் அங்கீகரித்தாக எங்கும் பேசாவிட்டாலும், அதை அந்நாட்களில் அவர் சகித்துக் கொள்ளவே செய்தார். யாக்கோபுடைய விஷயத்தில் நாம் பார்த்தால், யாக்கோபு ராகேலை நேசித்து, தெரிந்து கொண்டான். அவளைத் தான் அவன் திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும். ஏழு ஆண்டுகள் அவன் அவளுக்காக உண்மையாகப் பாடுபட்டான். மணமகள், தான் விரும்பிய ராகேல் தான் என்று முழுமனதோடு நம்பி திருமணமும் முடித்தான். ஆனால், காலையிலே அவள் லேயாள் என்று அறிந்தான். லாபானை நோக்கி : ஏன் எனக்கு இப்படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன். பின்னை ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணினீர் என்கிறான்? (ஆதி 29 : 25) அதற்கு லாபான் : மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கமல்ல என்று விளக்கம் கொடுத்தான். லாபான் ராகேலையும் உனக்குத் தருவேன். அவளுக்காக ஏழு வருஷம் வேலை செய் என்று யோசனை சொன்னான்! ராகேலுக்காக, யாக்கோபின் அன்பு அளவில்லாமல் இருந்தபடியால் அந்த யோசனையை அவன் ஏற்றுக் கொண்டான்.

இப்படிப் பல தாரங்களை (மனைவிகளை) மணந்து கொள்ளும் பழக்கம் வந்ததன் விளைவு என்ன? ஒரு பெரிய சந்தோஷமான குடும்பம் அமைந்ததா? இல்லை. "யாக்கோபு லேயாளைக் காட்டிலும் ராகேலை அதிகம் நேசித்தான் என்று நாம் வாசிக்கிறோம்" (ஆதி 29 : 30) முதலில் அவன் ராகேலை விரும்பியதால் இந்தப் பாரபட்சமான அன்பு ஏற்பட்டது இயற்கையே. ஆனால் இது பொறாமையை உண்டு

பண்ணியது. "கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார். இப்பொழுது என் புருஷன் என்னை நேசிப்பார்" என்ற அவளுடைய புலம்பலான வார்த்தைகள் லேயாள் ஒரு நேசிக்கப்படாத மனைவி என்பதை நமக்குக் காட்டுகிறது. லேயாள் இரண்டாம் குமாரனைப் பெற்று ". . . நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்கிறாள்" (ஆதி. 29 : 33).

"ராகேல் தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு யாக்கோபுவை நோக்கி : எனக்குப் பிள்ளை கொடு, இல்லாவிட்டால் சாகிறேன் என்றாள்" (ஆதி 30:1). உணர்ச்சி பொங்கின, வேதனை தரக்கூடிய வார்த்தைகளை இந்த சொந்த சகோதரிகளிடம் நாம் காண்கிறோம்.

காலம் கடந்து செல்லும் பொழுது, இந்த இரண்டு பெண்களும் தங்கள் வேலைக்காரிகளை யாக்கோபுக்குக் கொடுத்து, பிள்ளைகளைத் தங்களுடைய தாக்கிக் கொண்டார்கள். இது கூட அந்தக் கால கட்டத்தின் பழக்கங்களில் ஒன்று. இறுதியாக, ராகேல் யாக்கோபுக்குப் பிரியமான மகன் யோசேப்பைப் பெற்றுக் கொடுத்தாள். சில வருடங்கள் கழித்து யாக்கோபின் கடைசி மகனான பென்யமீனைப் பெறும்பொழுது, ராகேல் மரித்துப் போனாள். பதின் மூன்று குழந்தைகளும், லேயாள், ராகேல் ஆகிய இரு மனைவிகளும் அடங்கிய யாக்கோப்பின் குடும்ப வாழ்க்கையை நாம் கூர்ந்து கவனித்தால், தேவனுடைய விருப்பத்திற்கு மாறான பலதாரம், பாரபட்சம், பொறாமை, போட்டி இவைகளையே காண முடியும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிரந்தரமாக இருந்ததா என்றால், இல்லையென்பதே பதில் ஒற்றுமையற்ற மனைவிகள் தங்களை கணவன் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்? பொறாமை குணம் கொண்ட தாய்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தான் என்ன ஒழுக்கத்தைப் போதித்திருக்க முடியும்?

ஆதியாகமத்தின் பிற்பகுதியை நாம் வாசிக்கும் பொழுது அவை நம்முடைய உணர்வுகளைக் கிளறக் கூடியதாகவே உள்ளது. சஞ்சலமும், கண்ணீருமே அவர்கள் இறுதி நாட்களின் சொத்து இவைகள் நமக்கு உணர்த்தும் பாடம், தேவனுடைய வழியே எப்போதும் சிறந்தது என்பதே. ஆகவே, தேவனுடைய வழியை ஏற்றுக் கொள்வோம், கீழ்ப்படிவோம்.

**B.B. CHOATE**

**R.R. NAYAGAM.**

# முன் குறிக்கப்பட்டவர்கள்

முன் குறிக்கப்பட்டவர்கள், முன் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், முன் அழைக்கப்பட்டவர்கள், இந்த வார்த்தைகளைப் பற்றி தப்பான அபிப்ராயம் நிலவி வருகிறது. எப்பொழுதும் நம் கவனத்தில் இருக்க வேண்டிய தேவனுடைய வசனம், தேவன் பட்சபாதமில்லாதவர் என்பதாகும். பட்சபாதமில்லாத தேவன் எப்படி ஒருவனை முன் கூட்டியே நீ என்னிடத்தில் வரவேண்டும், நீ என்னிடத்தில் வரக்கூடாது என்று சொல்லுவார். பொய்யுரையாத தேவன், பட்சபாதமுள்ளவரல்ல. இரட்சிப்பைப் பற்றி கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின், சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை என்ன? நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத். 28 : 18–20) சுவிசேஷம் யாருக்கு? சகல ஜாதிகளுக்கும் (குறிக்கப்பட்டவர்களுக்கல்ல).

பின்பு கிறிஸ்து சீஷர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் (குறிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல) சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் (தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் மட்டுமல்ல). கிறிஸ்து உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமால் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

இரட்சிப்பு யூதருக்கு மட்டுமல்ல. புறஜாதிக்கும் இரட்சிப்பு அருளினார். கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரம் போட்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். மணலில் அஸ்திபாரம் போட்டவர்கள் இரட்சிக்கப்படவில்லை. கனிகொடாத மரமெல்லாம், வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். காதுள்ளவன் கேட்கக்கடவன். புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் இரட்சிக்கப்பட்டார்கள். ஆக, இந்த வார்த்தைகளின் மூலம் அறிவது, இரட்சிப்பு யாவருக்கும் பொதுவானது. யாவரையும்

தன்னிடம் வர அழைத்தார். (முன் குறிக்கப்பட்டவர்களை மாத்திரமல்ல). அப்படியானால், முன் குறிக்கப்பட்டவர்கள், முன் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள், முன் அழைக்கப்பட்டவர்கள் என்பதின் பொருள் என்ன?

பிதாவாகிய தேவனின் அநாதி தீர்மானம் இயேசுவைக் கொண்டு மனிதனை தமது சாயலாக உண்டாக்க வேண்டும். அவனுக்கு முழு சுதந்திரம் கொடுக்க வேண்டும். தேவன் படைத்த படைப்பையெல்லாம் அவன் ஆளுகை செய்ய வேண்டும். ஆனால் ஒரு கட்டளை கொடுத்தார். அவன் கட்டளையை மீறியதால், தேவ சமூகத்தை விட்டு விரட்டப்பட்டான். மனிதன் தேவனுடைய கட்டளையை மீறி பாவத்திற்குள்ளானான். இருப்பினும், அவனை அப்படியே விட்டுவிடக் கூடாது. அவனை, அவனுடைய பழை நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இந்த அநாதி தீர்மானத்திற்காக தேவன் இயேசுவை முன் குறித்தார். தெரிந்துகொண்டார். இந்த இயேசுவை அபிஷேகம் பண்ணி, முத்திரித்து உலகத்திற்கு அனுப்பினார். இந்த இயேசுவை விசுவாசித்து, இரட்சிக்கப்பட்டவர்களை வேதம் முன் குறிக்கப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அழைக்கப்பட்டவர்கள் என்று கூறுகிறது. அதாவது, பிதாவினால் முன் குறித்த, தெரிந்து கொண்ட, அழைக்கப்பட்ட இயேசுவை விசுவாசித்தவர்களை இந்த வார்த்தைகளால் தெரியப் படுத்துகிறது. இதுவே இதன் பொருள். எபேசியர் 1 : 4 – 6, 3 : 9 ஆகிய வசனங்களையும் வாசித்து தியானிக்கவும்.

**சகோ. ஞானம், மலேசியா.**

## நன்றி சொல்கிறேன்

*கடந்த 10.10.97 அன்று "திருமறை ஆசான்" சார்பில் நடத்தப்பட்ட நூல் வெளியீட்டுக் கூட்டத்திற்கு வருகை புரிந்து, நல் ஆலோசனைகளை வழங்கிய ஊழியப் பெருமக்களுக்கும் உற்சாகமாய்க் கலந்து கொண்ட சபை விசுவாசிகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.*

**ஆசிரியர்**

# கிறிஸ்துவை அறிக்கையிடுதல்

கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிடுதல் நற்செய்தியின் மற்றுமோர் கட்டளையாகும். அறிக்கை என்ற வார்த்தைக்கு தெரியப்படுத்துதல், அறிவித்தல், ஏற்றுக் கொள்ளுதல் பிறரில் விசுவாசத்தை வெளிப்படுத்துதல் என்று அர்த்தம். அவருக்கு கீழ்ப்படியும் ஒவ்வொருவரிடமிருந்தும் இதையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என ஒருவர் விசுவாசிப்பது பதிவேட்டில் இடம் பெறுவதை அவர் விரும்ப வேண்டும். இப்படி ஒரு அறிக்கையைச் செய்ய அவர் விரும்பாவிட்டால், பின் அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தயாராக இல்லை என்று பொருள் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர் கர்த்தருக்கு கீழ்ப்படியவும் முடியாது.

இந்த அறிக்கையின் முக்கியத்துவத்தை கிறிஸ்து கற்பித்ததை நாம் பார்க்க முடியும். மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத். 10 :32,33), இங்கு சில காரியங்களை இப்போது நாம் கவனிக்கலாம்.

1. எல்லோரும் கிறிஸ்துவை அறிக்கை செய்ய அழைக்கப்படுகின்றனர். அவர்கள் யார் எங்கிருக்கிறார்கள் என்பதெல்லாம் முக்கியமல்ல, இந்த உண்மை எல்லாருக்கும் பொருந்துகிறது.
2. கிறிஸ்துவையே அறிக்கை செய்ய வேண்டும் ஒருவனுடைய பாவங்களை அல்ல, முதல் முதலாக ஒருவனுடைய விசுவாசத்தை கர்த்தர் எதிர்பார்க்கிறார் பின்னர் அவனுடைய பாவங்களை மன்னிப்பது பற்றி செயல்படுகிறார்.
3. மக்களின் முன்பாக இந்த அறிக்கை செய்யப்பட வேண்டும். இதற்கு சாட்சியங்கள் தேவை. ஒருவன் உண்மையிலேயே கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனாக இருந்தால் அவர் பேரிலுள்ள விசுவாசத்தை சகலரும் அறிய வேண்டுமென்று அவன் விரும்பவேண்டும்.
4. மனிதருக்கு முன்பாக தம்மை கிறிஸ்து என அறிக்கை செய்கிறவனை தமது பரலோக பிதாவின் முன்பாக அறிக்கை செய்வதாக கர்த்தர் வாக்களித்திருக்கிறபடியால், ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவை

அவ்வாறு அறிக்கை செய்ய வேண்டியவனாக இருக்கிறான். பரலோகப் பிதாவின் முன்பாக தேவனுடைய குமாரன் அவனை அறிக்கை செய்வதில் உள்ள ஆசீர்வாதத்தையும், கௌரவத்தையும் ஒரு வினாடி சிந்தித்துப் பாருங்கள், கர்த்தர் என்ன கேட்கிறார்? மனிதர்களுக்கு முன்பாக அறிக்கை செய்யும் எளிதான காரியத்தை மட்டுமே கேட்கிறார்.

5. மனிதர்களுக்கு முன்பாக அவரை அறிக்கை செய்ய மறுப்பவர்கள் பரலோகத்திலிருக்கிற பிதாவின் முன்பாகவும் மறுதலிக்கப்படுவர். ஆனால் அவர்கள் அவரை அறிக்கை செய்ய மறுப்பது மட்டுமல்ல அவரை மறுதலிக்கவும் செய்கின்றனர். எனவே அதற்கேற்ப அவர்களுக்கு தண்டனை அளிப்பார். அவர் யார் எங்கிருந்து வருகின்றார் என்பதைப் பற்றியெல்லாம் கவலையில்லை. சுவிசேஷத்தின் இந்த இரு சுருக்கமான வசனப் பகுதிகளிலும் நிறைய சொல்லப்பட்டிருக்கின்றன ஆசீர்வாதங்களையும் அதே சமயத்தில் அவரை மறுப்பவர்களுக்குக் கிடைக்கும் தண்டனைகளையும் கர்த்தர் காட்டுகிறார். அதே சமயம், தேர்ந்தெடுக்க வேண்டிய முடிவை தனிப்பட்ட மனிதனிடம் விட்டு விடுகிறார்.

கிறிஸ்துவை அறிக்கை செய்யாதவர்களின் நிலை என்ன? அப்போஸ்தலர் யோவான் கூறுகிறார். "மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான் (II யோவான் 7) யார் கர்த்தரை அறிக்கை செய்ய வேண்டுமென்று பவுல் எழுதுகிறார். "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும். எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலிப் 2 : 11).

அடுத்து இந்த அறிக்கை வாயினால் செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், இரட்சிப்புக்காகவும் செய்யப்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம் தயவு செய்து கவனியுங்கள். "கர்த்தராகிய இயேசுவை உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன்இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய், நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10 : 9–10) இப்போது, இரட்சிக்கப்படுவதற்கு தனது பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தரை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதும் என சிலர் தவறாக முடிவு செய்துள்ளனர். ஆனால் விசுவாசத்தைப் பற்றிய காரியம் என்ன?

அறிக்கையிடுதல் விசுவாசத்தின் அடிப்படையில்தான் என ஒருவன் உறுதியாகக் கூறக் கூடும். பின்னர், மனந்திரும்புவதைப் பற்றிய காரியம் என்ன? மனந்திரும்புவது பற்றி இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. எனவே, எளிய வழியைக் கண்டு பிடிக்கத் தேடுபவர்கள் அநேகமாக பலவற்றைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். ஆனால் இரட்சிப்பின் திட்டத்தில், விசுவாசமும் கிறிஸ்துவை அறிக்கை செய்வதும் எப்படிப் பொருந்துகின்றது என்பதை அடுத்த வசனமே காட்டுகிறது.

முதலாவது ஒருவன் எவ்வாறு தனது இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும் என்று காட்டுகிறான். ஆனால் அது நீதிக்கோ, அல்லது இரட்சிப்புக்கோ சம்பந்தப்பட்டது. அதாவது, ஒருவன் இரட்சிக்கப்பட வில்லை ஆனால் இரட்சிப்படையும் வழியில் சென்று கொண்டிருக்கிறான், அல்லது முன்னேறிக் கொண்டிருக்கிறான் அடுத்து, இரட்சிப்பிற்காக வாயினால் அறிக்கையிடப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதே இங்கு அந்த அறிக்கையாகும். அது இரட்சிப்புக்காக செய்யப்படுகிறது. இரட்சிப்பிற்குள் அல்ல, இங்கு ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது. வேறு விதமாகக் கூறினார் கிறிஸ்துவின் விசுவாசமும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற அறிக்கையும் இரட்சிப்பைக் கொண்டு வரப் போதுமானவை அல்ல. விசுவாசமும் இவ்வித அறிக்கையும் இல்லாமல் ஒருவன் இரட்சிப்பு அடைய முடியாது என்பது நிச்சயமே, என்றாலும் இன்னும் அதிகமாக செய்ய வேண்டிய காரியங்களும் உள்ளன.

இறுதியாக, திருமுழுக்குப்பெற தன்னைத் தகுதியுள்ளவனாக்கும்படி இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை செய்ய ஒருவனுக்கு எப்போது தேவை ஏற்பட்டது என்பதற்கான ஒரு உதாரணம் உள்ளது. அந்த சம்பவத்தையே நாம் படிப்போம். "பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி : நீ எழுந்து, தெற்குமுகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாயப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜ ஸ்திரியாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து : ஊருக்குத் திரும்பி போகும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான் ஆவியானவர், நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை

வாசிக்கிறதைக் கேட்டு, நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி, பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேத வாக்கியம் என்ன வென்றால் : அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்டார். மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார் அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுபட்டுப் போயிற்று. அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே, மந்திரி பிலிப்பை நோக்கி : தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான் இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி, இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு, நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்," (அப் 8 : 26-39) இப்போது, இங்கு என்ன நடைபெற்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்துவைப் பற்றியும், அவருக்கு கீழ்ப்படிவது எப்படி என்பதைப் பற்றியும் இந்த மனிதனுக்குப் பிலிப்பு கற்பித்தான். பின் கர்த்தரைப்பற்றி அவன் அறிந்து கொண்டதும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க அவன் விரும்பினான். ஆனால் அவனுக்கு திருமுழுக்குக் கொடுப்பதற்கு முன்பு, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என அவன் விசுவாசிக்கிறான் என்று அவன் அறிய விரும்பினான் என்பதைக் கவனியுங்கள். மந்திரி ஆம் என்று ஒப்புக்கொண்ட பின்னரே, பிலிப்பு அவனுக்குத் திருமுழுக்குக் கொடுக்க விரும்பினான்.

இந்த உதாரணத்தின் அடிப்படையிலும் கிறிஸ்துவை அறிக்கை செய்வதில் சம்மந்தப்பட்ட சுவிசேஷத்தின் பிற வசனங்களுக்கு ஏற்பவும், யாருக்காவது திருமுழுக்கு கொடுக்கும் முன்பு, அந்த நபர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என ஏற்றுக் கொள்ளுகிறாரா என்று நாம் கேட்கிறோம். ஆம் என்று அவர் கூறியதும் பின் அவருக்குத் திருமுழுக்குக் கொடுக்க நாம் ஆயத்தமாகிறோம்.

இந்த அறிக்கையானது ஒரு சிறந்த அறிக்கை என்பதாக எப்போதும் குறிப்பிடப்படுகின்றன. உண்மையிலேயே ஒரு சிறந்த அறிக்கை என அழைக்கப்பட வேண்டுமானால், இது இவ்வாறு தான் இருக்க முடியும். எனவே நாம் என்ன செய்ய வேண்டும்? ஒரு மனிதன் இரட்சிக்கப்பட அவன் நற்செய்தியைக் கேட்க வேண்டும். அதை விசுவாசிக்க வேண்டும். பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டும். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என அறிக்கையிட வேண்டும். பின் இறுதியாக பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டி திருமுழுக்கு பெற வேண்டும். இந்நிகழ்ச்சியில் கிறிஸ்துவை அறிக்கை செய்வது இரட்சிப்பின் முழுமையான திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே அல்லது நற்செய்தியின் கட்டளைகளில் ஒன்று மட்டுமேதான் அது மட்டும் தனியாக யாரும் இரட்சிக்கப்பட முடியாது கர்த்தர் அதை எந்த இடத்தில் வைத்துள்ளாரோ, அங்கே இருக்கும் போது அது முக்கியத்துவம் பெற்று வல்லமையுள்ளதாக இருக்கிறது.

**J.C. Choate.** **எஸ்.எஸ். ராஜன்.**


# ஒரு அறிவிப்பு

"கிறிஸ்துவின் நற்செய்தி" "ஆரோக்கியமான உபதேசம்." என்னும் புத்தகங்களும், வேறு சில கைப்பிரதிகளும், விரைவில் வெளிவருகின்றன. தேவைப்படும் ஊழியர்களும், சகோதரர்களும் போதிய தபால் தலையுடன் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

**S.S. ராஜன்**

***கிறிஸ்துவின் சபை***

J. கோட்டை - 624 206

*திண்டுக்கல் மாவட்டம்*

# நேர்முறையான ஆவிக்குரிய சிந்தை

W.கிளெமெண்ட் ஸ்டோன், நெப்போலீன் ஹில், போன்றவர்கள் வெற்றிக்குத் தேவையான ஊக்கத்தைக் கொடுக்கும் கருத்துக்களை சொன்னவர்கள் வரிசையில் புகழ்பெற்றவர்கள். அவர்களுடைய பெருமுயற்சியினால் எண்ணிலடங்கா மனிதர்கள் Positive Mental Attitude (PMA) "நேர்மறையான மூளையறிவின் சிந்தை" என்பதில் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கானோர் இவர்களுடைய வெற்றிக்கான வழிமுறைகளை தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்து வந்துள்ளனர். இந்த PMA (Positive Mental Attitude) என்ற எழுத்துகள் அமெரிக்கா முழுவதும், ஏன் உலகம் முழுவதும் சிறப்பு ஒருங்கிணைப்புக் கூட்டங்கள், கருத்துப் பரிமாற்றுக் கூட்டங்கள் சிற்றுண்டி சமுதாயக் கூட்டங்கள் போன்றவைகளில் பிரசித்தம் பெற்றுள்ளன. ஒரு வேளை இந்த PMA ஒரு தேசத்தில் எல்லோரிடமும் காணப்பட்டால், அந்த தேசம் ஒரு சிறந்ததேசமாக உருவாகும் என்பதில் ஐயமில்லை. "நேர்மறையான சிந்தைகள் உன் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்" சபைகளிலும் கூட. சபைகளில் மூளை அறிவுக்குப் பதில் ஆவிக்குரிய சிந்தைகளும் நேர்மறையானவைகளாக பெருக்கமாக காணப்படுதல் அவசியம் என்பதற்குப் பல் காரணங்கள் உண்டு. அவைகள்

1. நம்முடைய உள்ளான மனிதன் ஆவிக்குரியவன் (II கொரி 4 :16).
2. நாம் ஒரு ஆவிக்குரிய ராஜ்யத்தில் வாழுகிறோம். (கொலோ.1 :11–13).
3. நாம் ஆவிக்குரிய யுத்தத்தில் ஆவிக்குரிய யுத்தம் செய்கிறோம் (எபேசி 6 : 10 – 20).
4. நம்முடைய பணி ஆவிக்குரியது (மாற்கு 16 : 15, 16)

இந்த நான்கு உண்மைகளினால் ஒவ்வொரு உண்மை கிறிஸ்தவனுக்கும், விசேஷமாக சபையை நடத்துகிற தலைமையாளருக்கு (leaders) கண்டிப்பாக தேவை. தேவ பிள்ளைகள் எப்பொழுதும் இந்த நேர்மறையான ஆவிக்குரிய சிந்தைக்கு சவால்களை சந்திக்க வேண்டியதாயிருக்கும். ஒரு சிறந்த உதாரணம் யாதெனில், பத்து உளவாளிகள் தேசத்திலிருக்கும் எதிராளிகளைப் பார்த்துவிட்டு, அவர்களுடைய உள்ளத்தில் காணப்பட்ட எதிர்மறை சிந்தையினாலே (Negative Attitude) எதிர்மறையான கருத்துக்களை வந்து சொன்னார்கள்). (எண் 13 : 1– 33).

இது இஸ்ரவேலருக்குள் முறுமுறுப்பை உண்டு பண்ணியது (எண் 14 : 1–19) தேவன் அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர்களுக்கு நியாயம் செய்து அவர்களை தண்டிக்கிறார். (எண் 14 : 20 – 45).

ஆரம்பகால சீடர்கள் – இன்னொரு உதாரணம். ஒரு கால கட்டத்தில் அவர்கள் கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து எங்கும் சென்று சுவிசேஷ பணி செய்தனர். ஒரு சமயம் அவர்களிடம் இயேசுவின் நாமத்தினால் எதுவும் பேசக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லப் பட்டது. ஆனால் பேதுருவும், யோவானும் அவர்களுக்குச் சொன்னது "நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார்கள். (அப் 4 : 19, 20). இது தேவனுக்காக நிற்கும் ஒரு சாதகமான ஆரோக்கியமான நிலை. காரணம் "நேர்மறையான ஆவிக்குரிய சிந்தை" (Positive Spiritual Attitude).

நாம் இந்த நேர்மறையான சிந்தைக்கு தேவையான சிலவற்றை ஆராய்ந்து பார்ப்போம். ஒருவேளை அவைகள் நம்மை ஆவிக்குரிய சிந்தையில் நேர்மறையாக வளரவும் செயல்படவும் உதவி செய்யும்.

முதலாவதாக தேவன் ஒருவர் உண்டு என்பதில் உனக்கு நல்ல உறுதியான தீர்மானம் தேவை. இது உனக்கு இல்லையெனில் நீ எப்படி பிராந்திய சபையில் தேவ சித்தத்தையும் அவருடைய கட்டளையையும் எடுத்து செயல்படுத்த முடியும்?

இரண்டாவதாக தேவனுடைய வல்லமையில் உனக்கு சந்தேகமில்லாத விசுவாசம் தேவை. வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த தேவாதி தேவன் எல்லாவற்றையும் தன்னுடைய வல்லமை யில் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவர். அவரே தேவாதி தேவன்.

நீ அவருடைய சித்தத்தை இந்த பூமியில் எடுத்து செயல்படுத்தும் போது கண்டிப்பாக உன் பக்கத்தில் நிற்பவர். யோவான் எழுதும்போது உலகத்திலிருப்பவனிலும் நம்முடன் இருப்பவர் பெரியவர் என்று சொல்லியுள்ளார். (I யோவான் 4 : 4) தேவ வல்லமையை விசுவாசி.

மூன்றாவதாக, நமக்கு மலைகளை பேர்க்கத்தக்க விசுவாசம் தேவை. இயேசு சொன்னார் கடுகளவு விசுவாசமிருந்தால் மலையை பெயர்ந்து தள்ளுண்டு போ என்று சொல்ல முடியும். (மத் 17 : 20).

சந்தேகம், பயம், அவிசுவாசம் போன்ற மலைகள் நம்முடைய விசுவாச பயணத்தில் குறுக்கிடும். அவைகளை கடுகளவு விசுவாசத் தினால் தள்ளிப் போட்டு வெற்றி நடை போட முடியும். நாம் இப்படிப்பட்ட மலைகளை பெயர்க்கும் விசுவாசமில்லாத பட்சத்தில் தேவனுக்காக மகத்தான காரியங்களை செய்யவியலாது.

நான்காவதாக, உங்களுக்கு தேவனுடைய ஒத்தாசையும் வழிகளும் எப்பொழுதும் உண்டு என்பதை மறந்துவிடாதீர்கள். ஆனால் அநேக சமயங்களில் நாம் நம்முடைய சொந்த வழிகளிலும் சுய அறிவிலும் செயல்படுகிறோம். நமக்கு முன்பு வைக்கப்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு முன்பு, எல்லோரும் கேட்கும் இரண்டு கேள்விகள், "இதற்கு என்ன விலை கொடுக்கவேண்டும்? "நம்மிடத்தில் எவ்வளவு இருக்கிறது?" நேர்மறையான ஆவிக்குரிய சிந்தையுள்ள ஒவ்வொருவரும் என்ன எண்ணுவார்களென்றால், பூமியும் அதின் நிறைவும் பிதாவுடையது அவரால் கூடும் அவர் எனக்கு கொடுப்பார் என்னுடைய எல்லாத் தேவைகளையும் அவரே சந்திப்பார், ஆனால் நமக்குத் தேவையானது அவர்மீது நம்பிக்கை வைப்பது. வங்கியில் நம்முடைய கணக்கில் சேமிக்கப்படும் பணத்தின் மீது நம்பிக்கையை வைப்பது நம்முடைய தேவனை பிரியப்படுத்தாது. நம்முடைய சவால் என்னவென்றால் தேவன் நமக்கு எதைக் கொடுத்திருக்கிறாரோ அவைகளில் நாம் நல்ல உக்கிராணக்காரனாக இருக்க வேண்டும் என்பதே.

ஐந்தாவதாக ஜெப வல்லமை. நேர்மறையான ஆவிக்குரிய சிந்தைக்கு (PSA) மிகவும் முக்கியமான ஒன்று நாம் விசுவாசத்துடன் ஜெபிப்பதாகும். (யாக் 1 : 5-8). நாம் ஜெபத்தின் மூலமாக பரலோக பிதாவுடன் எப்பொழுதும் இடைவிடாத ஒரு தொடர்பு வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். (Iதெச 1 : 17). நாள்தோறும் ஜெபிக்காத ஒருவன் பலவீனமாகிவிடுவான். மாபெரும் காரியங்கள் ஜெபத்தின் வல்லமையால் பெற முடியும். உனக்கு நேர்மையான ஆவிக்குரிய சிந்தை (PSA) தேவையென்றால் தினந்தோறும் வல்லமையோடு ஜெபிப்பதை அசட்டை செய்துவிடாதே.

ஆறாவதாக, கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்ய இயலும் என்று நம்பு. எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு, கிறிஸ்துவே என்னை பெலப்படுத்துகிறவர் (பிலிப் 4 : 13) என்று பவுல் சொல்லுகிறார். இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளுவது கர்த்தருடைய சித்தத்தை செய்யும் போது கண்டிப்பாக நமக்கு தோல்வி கிடையாது.

அவர் நம்மால் முடியாத ஒரு செயலை செய்யும்படி நம்மிடத்தில் பணிக்கவில்லை. அப்படிச் சொல்லவுமாட்டார்; நம்முடைய பணி வெற்றியின் பணி. வெற்றிக்காண பெலத்தைக் கொடுப்பவர் கிறிஸ்துவே.

ஏழாவதாக நடப்பவை சகலமும் நம்முடைய நன்மைக்காகவே நடக்கிறது என்பதை விசுவாசி (ரோமர் 8 : 28) நடப்பது எல்லாம் நல்லதாக

நடக்கும் என்று இது சொல்லவில்லை. மாறாக நடப்பது எல்லாம் நன்மைக்காக நடக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எட்டாவதாக, தேவன் நம்மை, நற்பணிக்காக தகுதிப்படுத்துவார். பவுல் அடிகளார் சொல்லும் போது "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக (II தீமோ 3:16–17) இவைகளிலிருந்து நமக்கு நன்குதெரிகிறது. வேதாமத்திலும், சபையிலும் நாம் அவருடைய சித்தத்தை முழுமையாக செய்ய சகலமும் பரிபூரணமாக இருக்கிறது. நாம் இந்த P.S.A வுடன் ஆண்டவருடைய சித்தத்தைச் செய்ய முன்னேறிச் செல்வோம்.

ஒன்பதாவதாக, நீங்கள் மறந்துவிடாதீர்கள். கர்த்தருக்குள் உங்களுடைய பிரயாசம் விருதாவாக இல்லை. (I கொரி 15 : 58), நாம் மரணபரியந்தம் உண்மையும் விசுவாசத்துடனும் இருந்தால், ஜீவ கிரீடத்தைப் பெறுவோம். (வெளி 2 : 10 : யாக் 1 : 12). இந்த மாபெரும் பரிசு, நித்திய பரிசு நம்மை இந்த நேர்மறை ஆவிக்குரிய சிந்தையில் ஊக்கப்படுத்துவதாக.

பத்தாவதாகவும் இறுதியாகவும் இரட்சிப்பின் நிச்சயமும் வர்க்குத்தத்தமும் நம்மை இந்த ஆவிக்குரிய சிந்தையில் தொடர்ந்து நாம் இயங்க நம்மை பண்படுத்துகிறது. யோவான் எழுதும் போது" உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்". (Iயோவான் 5 : 13) இந்த சிந்தை அந்தகார உலகில் அநேக காரியங்களை சந்திப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது. அநேகருடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள நம்மை ஊக்கப்படுத்தும், நம்மிடம் அநேகருக்கான நற்செய்தியுண்டு, அதை நாம் நேர்மறையான ஆவிக்குரிய சிந்தையுடன் செய்வோம்.

நன்றி!

J.J. TURNER

வே. தானியேல் துரைராஜன்
திருச்சி – 1.

# I கொரிந்தியர் 16 : 13

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு இந்த நிருபத்தை எழுதும் போது அவர்களுடைய மனநிலையை சரியாய் கணித்து அதற்குத்தகுந்தாற் போல் நிருபத்தை எழுதுகிறார். I கொரிந்தியர் 16:13ல் அவர் நான்கு கருத்துகளை நான்கு விதமாக் சொல்லி அவைகளை நடைமுறைப்படுத்தும்படியும், அப்படி நடைமுறைப்படுத்திய கிறிஸ்தவர்களுக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் திட்டவட்டமாக சொல்லி அவர்களை உற்சாகப்படுத்துகிறார். இப்பொழுது நாம் அந்த நான்கு கருத்துக்களை தியானித்து நாமும் நடைமுறைப்படுத்த முயற்சி செய்வோம்.

**1. விழித்திருங்கள் :**

நமது நாட்டின் எல்லையில் இரவும் பகலும் உறங்காமல் நமது நாட்டின் ராணுவ வீரர்கள் நாட்டைப் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் அந்நிய தீய சக்திகள் நாட்டிற்குள் ஊடுருவி விடுவார்கள் என்பதற்காக விழித்துக் கொண்டு காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல கிறிஸ்தவர்களாகிய நாமும் விழித்திருக்க வேண்டும் என்கிறார் பவுல். ஆத்துமாவிலே விழித்திருக்க வேண்டும் என்கிறார். (I தெச 5 : 6)ல் "ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருங்கள்", ஏனென்றால் பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று வகை தேடி சுற்றித் திரிகிறான். (I பேதுரு 5 : 8). நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு இவ்விதமாய் சொல்லுகிறார் (மாற்கு 13 : 31-37) வசனம் 33-ல், "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள். விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், நீங்கள் சோதனைக்குட்படாமல் விழித்திருங்கள்", என்கிறார். அது மாத்திரமல்ல "இரட்சிப்பு நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. ஆகவே நித்திரையை விட்டு எழுந்திருங்கள்", என்கிறார் பவுல் (ரோமர் 13 : 11, எபே. 5 : 14).

**2. விசுவாசத்தில் நிலைத்திருங்கள் :**

இந்த விசுவாசம் உலகத்தில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மிகவும் அவசியமாய் இருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்தின் மூலமாகவே கிறிஸ்தவ மார்க்கத்தின்

போதனைகளை நன்றாய் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் போது தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம் என்று எபேசியர் ஆசிரியர் சொல்லு கிறார். (எபே. 3 : 12–17), கிறிஸ்து சொல்லுகிறார், "தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்", (யோ. 14 : 1) விசுவாசமாயிருந்து என்னில் நிலைத்திருங்கள் என்கிறார் (யோ. 15 : 4). "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான். "(I யோ. 3 : 2–3) விசுவாசம் கிரியை செய்ய வேண்டும் என்கிறார் யாக்கோபு ஆசிரியர். ஏனென்றால் "கிரியை இல்லாத விசுவாசம் செத்தது" (யாக். 2: 7–26) தேவனிடத்தில் நாம் விசுவாசத்தோடு கேட்கும் போது கேட்டதைப் பெற்றுக் கொள்ள முடியும், விசுவாசம் இல்லாமல் தேவனை தரிசிப்பது கூடாத காரியம். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் (யாக் 5 : 15). எபிரெயர் 11ஆம் அதிகாரத்தின் விசுவாசப் பட்டியலை படிக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவர்களும், நாமும் இந்த விசுவாச பட்டியலில் ஒருவராய் இருக்க முயற்சிப்போம் என்ற வைராக்கியம் கொள்ள வேண்டும். ஏனென்றால் (எபி 11 : 33) அது நமக்கு ஒரு உற்சாகத்தை கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. (எபி 11 : 33–34).

**3. புருஷராயிருங்கள் :**

நாம் இந்த புருஷத்துவத்தை வேறுவிதமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் இது ஆவிக்குரிய புருஷத்துவம். ஆத்துமாவிலே வளர்ச்சியடைந்தவர்களைக் குறித்து சொல்லப்பட்ட வார்த்தை. அதைத்தான் எபேசிய ஆசிரியர் விளக்கமாக சொல்லுகிறார், "மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (எபே. 4 : 24). மேலும் பவுல் சொல்லுகிறார், "கிறிஸ்துவுக்குள் உங்களை குழந்தைகள் என்று எண்ணி பேச வேண்டியதாயிற்று" (I கொரி. 3 : 1). அப்படியானால் இவர்களிடத்தில் புருஷத்துவம் வரவில்லை. ஆகவே தான் இவர்களை ஆத்துமாவில் வளர்ச்சியடையாதவர்கள் என்று சொல்லுகிறார். மீண்டும் பவுல் தொடருகிறார். புருஷத்துவம் உண்டாக வேண்டுமானால், "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது" ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4 : 31 – 32) என்கிறார்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒவ்வொருவரும் பூரண புருஷராகும் வரைக்கும், இந்த புருஷத்துவத்தில் அனைவரும் வளரும்படியாக, "சபையில் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.

**4. திடன் கொள்ளுங்கள் :**

பவுல் இதைக்குறித்து கொரிந்து சபையாருக்கும் கலாத்தியா நாட்டு சபையாருக்கும் எழுதும் போது திரும்ப திரும்ப இதைச் சொல்லியே அவர்களை திடனாய் இருக்கும்படி எச்சரிக்கிறார். அதே வேளையில் திடனாய் இருப்பவர்கள் திடனற்றவர்களை தேற்ற வேண்டும் என்கிறார் பவுல். அதைத்தான் பவுல் தன் வாழ்க்கையிலேயும் செய்தார். அதற்கும் மேலாக நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய வாழ்க்கையில் அவைகளை நிரூபணம் பண்ணினார். அது மாத்திரமல்ல, தமது சீடர்களையும் அவ்விதமாய் நடக்கும்படியாக கட்டளை கொடுத்தார். ஒருமுறை அவர் கடலின் மீது நடந்து வருவதைப் பார்த்த சீடர்கள் மிகவும் பயந்து நடுங்கினார்கள். அதைக் கண்ட இயேசு "பயப்படாதிருங்கள், நான்தான்" என்றார். இன்னும் அநேக சந்தர்ப்பங்களில் தமது சீடர்களை அவர் திடப்படுத்தினார்.

முதல் நூற்றாண்டிலே அப்போஸ்தலர்கள் பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று விசுவாசிகளை சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களை திடப்படுத்தினார்கள். பவுலும் பர்னபாவும், லீஸ்திராவுக்கும், இக்கோனியாவுக்கும், அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து சீஷருடைய மனதைதிடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள். (அப். 14 : 21-22, 18 : 22-23).

**நாம் ஏன் திடன் கொள்ள வேண்டும்?**

ஏனென்றால் அவரைப் (கிறிஸ்துவை) பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது (எபே. 3 : 12). ஆகவே நாம் திடன் கொள்ள வேண்டும். பவுல் சொல்லுகிறார், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கும் பெலனுண்டு" (பிலி. 4 : 13) என்கிறார் பவுல். நாம் நம்முடைய கிறிஸ்தவ

ஜீவியத்தில் திடனாய் நின்று வருகின்ற உபத்திரவங்கள், சோதனைகள், போராட்டங்கள், பிசாசின் தந்திரங்கள் எல்லாவற்றையும் எதிர்த்து ஜெயங்கொள்பவர்களாய் இருக்க வேண்டும்.

ஆகவே நாம் இந்த நான்கு காரியங்களை மனதில் வைத்து நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைபடுத்த முயற்சி செய்வோமானால் நிச்சயமாக ஆண்டவர் நமக்கு ஜெயத்தைக் கொடுப்பார் என்பது உறுதி. நம்முடைய பிதாவாகிய தேவனுடைய அன்பும், அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியமும், பரிசுத்தவான்கள் அனைவரோடும், விசேஷமாய் இதை வாசிக்கும் அனைவரோடும் இப்பொழுதும் எப்பொழுதும் இருப்பதாக ஆமென்.

**யோசுவா செல்வம்.**

## சங்கீதங்களை பிரதானமாக ஏழு பிரிவுகளாக பிரிக்கலாம்

1. *போதனையை கொடுக்கும் சங்கீதங்கள் (1, 119, 139)*
2. *துதி சங்கீதங்கள் (8, 19, 46,47,48,115,136)*
3. *நன்றி செலுத்தும் சங்கீதங்கள் (30,34,40,65,67,118,138)*
4. *தனிமனிதனின் புலம்பல் சங்கீதங்கள் (13,17,51,73)*
5. *தேவன் மீது நம்பிக்கை வைக்கும் சங்கீதங்கள் (34,16,23,25)*
6. *மேசியாவை குறிக்கும் சங்கீதங்கள் (2,24,101,110)*
7. *சபித்தல் சங்கீதங்கள் (35,69,109)*

# ஆவியின் கனி I

## அன்பு

ஒருவரில் ஒருவர் சிநேகமாய் இருப்பது, ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருப்பது போன்றவற்றையே பெரும்பாலானோர் அன்பு என்று எண்ணுகிறார்கள். இச்செயலை அன்பு என்று கருதாமல் கடன் என்று கருதுவதே ஏற்றதாயிருக்கும். இவ்விதமான செயல்களில் குறைபாடுகள் தோன்றும் போது அது பகையாகவும் மாறக் கூடியதாயிருக்கிறது. இந்நிலையில் உண்மையான அன்பிற்காக ஏங்கித் தவிப்போர் ஏராளம். என்னிடத்தில் உண்மையாய் அன்பு கூற யாருமே இல்லையா என்ற ஏக்கம் இன்று திரளான உள்ளத்தை வருத்தத்தில் மூழ்கச் செய்துள்ளது. ஆனால் ஒருவன் தனது அறியாமையின் காரணமாகவோ அல்லது சூழ்நிலையின் காரணமாகவோ செய்த பாவக் குற்றங்களுக்காகக் கலங்கி என்னை ஏற்றுக் கொள்வாரும், எனக்கு மன்னிப்பை அளிப்பாரும் இல்லையே என்று கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் இவ்விதமான ஆன்மீக தாகத்தைத் தீர்க்க மனிதர்களால் கூடாமற் போனாலும் உங்களை இம்மண்ணில் உண்டாக்கினவர் உங்கள் மீது உண்மையான அன்பு வைத்துள்ளார் அவருடைய நேச கரத்தால் உங்களை அணைத்துக் கொள்ள ஆசையாய் காத்துக் கொண்டிருக்கிறார். இதை நீ அறிவாயா?

மனுஷரிடத்தில் அன்பை எதிர்பார்ப்பதற்கு அன்பு மனுஷரால் உண்டானதல்ல'' அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது'' (I யோ 4 : 7) "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (I யோ 4: 16) தேவன் நம்மேல் வைத்த அன்பை வெளிப்படுத்த தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பி நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்ததினால் அன்பு உண்டாயிருக்கிறது (I யோவா 4 : 9, 10) பவுல் என்னும் அப்போஸ்தலன் எழுதுகிறார் "நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான் (ரோமர் 5 :7) என்று. ஆனால் கொலைபாதகன், கொள்ளையடித்தவன், மற்றவர்களுக்கு பொல்லாங்கு செய்தவனுக்காக அவனுடைய நலனுக்காக உதவி செய்யும் மனமுள்ளோர் எவரேனும் இப்பூமியில் உண்டோ என சிந்தித்து பாருங்கள் ஆனால் நாம் பாவிகளாயும், தேவனுக்கு சத்ருக்களாயும் இருக்கையில் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பினால் நம்முடைய அக்கிரமங்களையும்

பாவங்களையும் நினையாமல் நம்முடைய சகல பாவங்களையும் மன்னித்து நம்மை சுத்திகரித்து நாம் இவ்வுலகில் நல்லவர்களாக வாழ வேண்டும் என்று விரும்பி நமக்காக தம்முடைய குமாரனாகிய இயேசுவை கல்வாரி சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்து தமது அன்பை விளங்கப் பண்ணினார் (ரோமர் 5 : 8). இதுவே ஆவியின் கனியான அன்பு இந்த உண்மையான அன்பை அடைய விரும்பு வீரானால் இயேசு கிறிஸ்துவை உங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய வார்த்தைகளைக் கைக் கொள்ளுங்கள். இயேசு "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை (மத். 22 : 37), எனக் கூறியுள்ளார். நாம் தேவனுடைய கற்பனைகளை கைக் கொள்ளுவதே அவரிடத்தில் அன்பு கூருவதாம் (1யோ 5 : 3) அன்பினால் தேவனுடைய கற்பனைகளாகிய வசனங்களை கைக் கொள்ளுகிறவனின் சகல பாவங்களையும் மன்னித்து தம்முடைய பிள்ளையாக ஏற்றுக் கொண்டு அவனோடு வாசம் பண்ணுவார்.

இயேசு ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான் அவனில் என் பிதா அன்பாயிருப்பார் நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம் பண்ணுவோம் என்கிறார் (யோ. 14 : 23) இந்த ஆசீர்வாதம் அன்பினால் உண்டாகும் பலன்.

உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே. (நாம் கைக்கொள்ள வேண்டிய) இரண்டாம் கற்பனை (மத் 22 : 39) நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளும் போது தேவனுடைய பிள்ளை களிடத்தில் அன்பு கூறுகிறோமென்று (I யோ 5 : 2) வேதம் வெளிப் படுத்துகிறது இயேசு" என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ளமாட்டான் (யோவா 14 : 22).

நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்வதே என்று கூறியுள்ளார். அவரிடத்தில் அன்பு கூறுவதாம் அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (I யோ 5 : 3).

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து நன்மையை பற்றிக் கொண்டிருங்கள் (ரோமர் 12 : 9).

தேவ கிருபை உங்களோடிருப்பதாக

(தொடரும் . . . . .)

சகோ : ஹென்றி மோகன்
நீலகிரி.

# ஆண்டவரும், அப்போஸ்தலரும், பிரசங்கிகளுக்கு வைத்திருந்த முன் மாதிரி

உலக இரட்சகராகிய இயேசுவும் அவரது அப்போஸ்தலரும் பிரசங்கத் தொழிலை தமது சபையில் நியமித்து அத்தொழில் நடப்பிக்க ஆட்களையும் அமர்த்த திட்டம் செய்து தாமே அவ்வூழியஞ் செய்யாமல் விட்டிருக்கலாமே சர்வ ஞானமும் அளவில்லா தயையும் நிறைந்த ஆண்டவராகிய இயேசுவுக்கும் அவரைப் பின்பற்றின அப்போஸ் தலருக்கும் அப்படிச் செய்வது தகுதியாய்க் காணப்படவில்லை நமது ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் நமக்கு மாதிரியாய் இருக்க அவர்களாகவே பிரசங்கத்தினர். நமது ஆண்டவர் நான் பிரசங்கிக்க வந்தேன் என்றார் (யோ. 7 : 16–17).

நாம் சில விசயங்களில், ஆண்டவராகிய இயேசுவை பின்பற்ற இயலாது. உதாரணமாக அவர் அதிகாரத்தோடே போதித்து மனிதரை மீட்டும்படியாக அவர் அடிமையின் ரூபமெடுத்தது போன்றவற்றை பின்பற்ற முடியாது. அது கூடாத காரியம். நாம் நமது பிரசங்க ஊழியத்தில் பின்பற்றக் கூடியதும் பின்பற்ற வேண்டியதும் சில முக்கியமான விசயங்கள் இருக்கின்றன அவைகளை பின்பற்றுவோம்.

ஆண்டவராகிய இயேசு தமது பிரசங்கம் மக்களுக்கு எளிதாகவும், புரிந்து கொள்ளும்படியாகவும் இருக்க பல உவமைகளை சேர்த்துக் கொண்டு போதித்தார். அவர் வேத வாக்கியங்களைக் கொண்டு போதகம் பண்ணினார். அடிக்கடி பழைய ஏற்பாட்டிலுள்ள வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக் கூறி அவைகளை வேத வசனமாக ஒப்புக் கொண்டு வியாக்யானம் சொல்லியிருக்கிறார். (லூக்கா 4 : 15–22) இப்படிப்பட்ட மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும். ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்க வேண்டும் என்று நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கட்டளையாகும்.

நமது இரட்சகரின் போதனைகள் இலக்கு பார்த்து எய்த அம்புகள் போல் இருதயத்தில் படத்தக்கதாய் இருந்தது. ஆதலால் தான் அநேகர் அவரைப் பின்பற்றினார்கள். அவருக்கு செவி கொடுத்தார்கள். (லூக். 19 : 35–48), நமது போதனைகளும் இலக்கு பார்த்து எய்த அம்புபோல் இருக்க வேண்டும். அநேகருடைய இருதயத்தில் தேவ வசனம் படத்தக்கதாக இருக்கவேண்டும். நம் ஆண்டவர் ஜனங்களின் மீது அன்பும், பாசமும் அக்கரையும் உடையவராக இருந்ததால் தான் அவரது போதனைகளை ஆவலுடன் கேட்டார்கள். (மத் 15 : 32).

நாமும் அவரைப் போல ஜனத்தின் மீது அன்பும், பாசமும் அவர்களின் மீது கரிசனையும் உடையவராக இருக்க வேண்டும். (மத் 7 : 12) யாக் (4 : 17) அப்பொழுது தான் நமது போதனைகள் பலன் தரக்கூடியதாக இருக்கும். இரட்சகர் பரத்துக்கு ஏறின பின்பு அப்போஸ்தலர்கள் சிறந்த பிரசங்கிகளாக விளங்கினார்கள். அவர்கள் இயேசுவோடிருந்த அவர் மாதிரியைக் கண்டு அவரையே மாதிரியாத தங்களுக்குக் கொண்டார்கள். (I பேதுரு 2:21) அவர்கள் எருசலேம் பட்டணம் துவங்கி பூமியின் கடைசி பரியந்தம் வரை பிரசங்கித்தனர் (லூக்கா 24 : 47) கொலோ 1: 6. இதனால் தங்களுக்கு நேரிட்ட துன்பங்கள், கொலைகள், சோதனைகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார்கள். அப்போஸ்தலர்கள் எல்லாரும் ரத்த சாட்சியாக மரித்து இன்றும் நமக்கு மாதிரிகளாக சாட்சிகளாக விளங்குகிறார்கள். பவுல் அப்போஸ்தலன் தனக்கு சுவிசேஷத்தினிமித்தம் நேரிட்ட துன்பங்களை இளம் பிரசங்கி தீமோத்தேயுக்கு எழுதி இருப்பதற்கு காரணம் நாமும் சுவிசேஷத்தினிமித்தம் பாடுகளையும் துன்பங்களையும் ஏன் மரணத்தையும் ஏற்றுக் கொள்ள மனம் படைத்தவராக இருக்க வேண்டும் என்ற கார்ணத்தால் அப்படி எழுதி நினைவுபடுத்துகிறார். II தீமோ 2 : 10–11 இயேசுவினிமித்தமும் அவரது ஊழியத்தினிமித்தமும் வரும் பாடுகள் துன்பங்கள் எல்லாம் நமக்கு சிலுவையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சிலுவையைச் சுமந்து கொண்டு இயேசுவைப் பின்பற்ற வேண்டும். இது நமக்கு பாரமாக இருந்தால் பிரசங்கப் பணிக்கு வராமல் இருப்பதே நல்லது. (லூக் 14 : 27), (II பேதுரு 2 : 20, 21) ஆண்டவர் நிமித்தமாக வந்த பாடுகளையும், துன்பங்களையும் அப்போஸ்தலர்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு பாடுகளை பாக்கியமாக கருதினார்கள் (அப். 5 : 40–42) இன்றும் நாம் அனைவரும் ஆண்டவருடைய பாடுகளுக்கு பங்காளிகளாய் இருக்கிறோம் என்று எண்ணி சந்தோஷப்பட்டு அவர் நிமித்தமாக அவரது பணியின் நிமித்தமாக வரும் நிந்தைகளை ஏற்றுக் கொண்டு பாக்கியவான்களாய் இருப்போம் (I பேதுரு 3 : 13 –16) இதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துவோம். இதுவே நமக்கு கொடுக்கப்பட்ட சொத்து ஆண்டவரும் அப்போஸ்தலரும் விடாமுயற்சியாக பிரசங்கித்தனர் இதினிமித்தம் தங்களையே ஒப்புக் கொடுத்தார்கள். நாமும் நமது ஆண்டவரையும் அப்போஸ்தலரையும் மாதிரியாகக் கொண்டு நாமும் விடாமுயற்சியாக சுவிசேஷத்தை பிரசங்கிப்போம். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு'' என்கிற கட்டளையை ஏற்றுக் கொண்டு நிறைவேற்று வோமாக இம்முயற்சியில் தேவன் தாமே உங்களுடன் இருப்பாராக. (II தீமோ 4 : 2 மத் 28 : 20).

**கே. பாஸ்கர்**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20, அக்டோபர்-1997
-THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ் " வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
**காங்கயம் - 638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK POST

If undelivored Please return to
The Editor Phone (04257) 20030
THIRUMARAI AASAAN
Post Box No. 27 KANGAYAM - 638 701.